சுருக்கம்

பணியமைப்பு – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி. ப. திவ்யா (த/பெ. சு. பழனி (லேட்) முன்னாள் அலுவலக உதவியாளர்) – அரசினர் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறையின் அரசாணை மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவுகள் 20 (6) (b), 15 மற்றும் 28(2) ஆகியவற்றை தளர்த்தி பணிவரன்முறை செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பணி.1(1)) துறை

அரசாணை (2டி) எண்.25

நாள் 28.12.2020
திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம், மார்கழி 13

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
3. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் கடித ந.க. எண்.15875/இபி1/2006, நாள் 09.06.2020.

---

ஆணை:-

மேலே மூன்றில் படிக்கப்பட்ட தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் கடிதத்தில், தொழில் வணிக இயக்குநரகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த திரு. சு. பழனி என்பவர் பணியிடையே 10.01.2006 அன்று இறந்துள்ளார். அன்னாரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி. பி. ரேவதி தனது மகள் திருமதி. ப. திவ்யா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கக் கோரி 13.03.2006–ல் விண்ணப்பித்திருந்தார் என்றும், கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்கத் தேவையான சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.15875/இபி1/2006, நாள் 11.06.2019–ன்படி திருமதி. ப. திவ்யா (த/பெ. சு. பழனி (லேட்) முன்னாள் அலுவலக உதவியாளர்) என்பவர் அரசினர் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் 20.06.2019 அன்று முற்பகல் பணியேற்பு செய்துள்ளார் எனத் தெரிவித்து, தனியரின் பணியினை

JOINT DIRECTOR (ENGINE...
Chemical Testing and Analytical Labor... L)
Dept. of Industries & Com...
Guindy, Chennai - 60...
✆: 044-225016 jd.ctal...